DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 131/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராஜு | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் நரசிங்காபுரத்தில் வசித்து வருகிறேன். ஆசாரி வேலை செய்து வருகிறேன். அசா.1 பொன்னுசாமியை எனக்கு 10 வருடமாக தெரியும அவரது வீட்டில் கதவை உடைத்து நகைகளை திருடி சென்று விட்டதாக தகவல் கூறினார். கதவை சரி செய்து தருமாறு கூறினார். மறுநாள் நான் அசா.1 பொன்னுச்சாமி வீட்டுக்கு சென்றேன். உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார். அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் மற்றொருவர் கையொப்பம் செய்தார். யார் என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரிந்து கையொப்பம் செய்தேன். **பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செயய்ப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கையெழுத்து போட்டதாக சொன்னதில் என்ன எழுதியிருந்தார்கள் என்று தெரியாது என்றால் அதில் ஸ்கெட்ச் போட்டார்கள், சொன்னார்கள். நீங்கள் கையெழுத்து போடும்போது முதலில் நீங்கள்

தான் கையெழுத்து போட்டீர்களா என்றால் நான் இரண்டாவது போட்டேன் என நினைக்கிறேன். அக்கம் பக்கத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம்.

2. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டீர்கள் என்றால் என்றாலும் அவர் உங்களுக்கு தெரிந்த நபர் என்பதால் சம்பவ இடத்தில் போட்டதாக சொல்கிறீர்கள் என்றால் சம்பவ இடத்தில் தான் போட்டேன்.
3. அசா.1 ஆனவர் நவீன கருவி மூலம் உடைத்ததாக சொல்லி உள்ள நிலையில் அது பற்றி உங்களிடம் கூறினாரா என்றால் ஆமாம், ஆனால்அது பற்றி எனக்கு தெரியவில்லை நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வரைபடம் தயாரிக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்துக் கழுத்து போட்டீர்கள் என்றாலும் சரியல்ல

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.